திரு. ஏ. சுப்பிரமணியம்: மத்திய அரசு பட்டம் பெற்றவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க 25 கோடி ரூபாய்த் திட்டம் அறிவித்ததே அந்தப் பணத்தில் தமிழக அரசுக்குப் பங்கு கிடைத்ததா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நமக்குப் பங்கு என்பது இல்லை. அவர்களே அந்தத் திட்டத்தை நிறைவேற்றுகிறார்கள். நம்முடைய மாநிலத்தில் எவ்வளவு என்ற விவரம் இல்லை.

திரு. கா. காளிமுத்து : பொறி இயல் பட்டதாரிகளுக்கு வழங்கப்படுகின்ற இடைக்கால வேலை வாய்ப்புத் திட்டத்தைப் போல் ஏனைய பட்டதாரிகளுக்கும் வழங்க அரசிடம் செயற் குறிப்பு இருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது போன்ற ஐ.டி.ஐ-ல் படித்தவர்கள், பாலிடெக்னிக்கில் படித்தவர்களுக்குத் தனியாகக் கடன் கொடுத்து எந்த அளவுக்குப் புதிய தொழில்களை ஏற்படுத்தலாம் என்ற திட்டமும் பரிசீலிக்கப்பட்டு ஆயிரம் ரூபாய் கொடுக்கலாம் என்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

வாலிநோக்கத்தில் உப்புத் தொழிற்சாலை

* 472 வினா—**திரு. எஸ். காதர் பாஷா என்கிற வெள்ளைச்சாமி :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் வட்டம், வாலிநோக்கம் என்னுமிடத்தில் புதிய உப்பு தொழிற்சாலை ஆரம்பிக்கும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் என்றால், அத்திட்டம் எப்பொழுது செயல்படும்?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) & (இ) வாலிநோக்கம் உட்படும் மாரியூர் தரிசை ஒரு புதிய உப்புத் தொழிற்சாலையாக விருத்தி செய்யும் திட்டமென்று உள்ளது. அங்குள்ள உப்பு நீரின் தகுதியையும், நிலத்தின் தன்மையையும் பற்றி பரிசோதனை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதன் முடிவு தெரிந்தவுடன் அங்கு உப்பு உற்பத்தி தொழிற்சாலை அமைப்பது பற்றி முடிவு செய்யப்படும்.

திரு. எஸ். காதர் பாட்சா என்கிற வெள்ளைச்சாமி : முதுகளத்தூர் வட்டத்தில் எந்தவிதத் தொழில்களும் இல்லை யென்பதை அரசு அறிந்திருக்கிறது. இந்த உப்புத் தொழிலைத் துரிதமாக செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இந்தத் திட்டம் அந்தப் பகுதி மக்களுக்கு நல்ல வேலை வாய்ப்பைத் தரும். இதன் மூலம் ஆண்டு ஒன்றுக்கு இரண்டரை லட்சம் டன் வரை உப்பு உற்பத்தி செய்ய வாய்ப்பு இருக்கிறது. இந்தத் திட்டத்திற்குச் சுமார் 55 லட்சம் ரூபாய் வரை ஆகலாம் என்று கருதப்படுகிறது.